**தலைப்பு 255 – கொழும்பு மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 04 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கொழும்பு மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்ததாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது செயற்படுத்தியிருந்ததாக.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதி நிலைமைக் கூற்று (ACA-6) இன் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுதியில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 8,149,483,260 ஆக இருந்ததுடன் திறைசேரி சொத்துக்கள் கணக்கு அறிக்கை (SA 82) இன் பிரகாரம் இப்பெறுமதி ரூபா 8,407,376,732 ஆக இருந்தமையால் ரூபா 257,893,472 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. 2019 ஒக்தோபர் 15 ஆந் திகதிய 269/2019 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் 3.8 பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்படி மீதிகளின் வேறுபாடு மற்றும் விலகல் சீராக்கப்பட்டு சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 ஒக்தோபர் 15 ஆந் திகதிய 269/2019 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் 3.8 பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீதிகளின் வேறுபாடு சீராக்கங்கள் செய்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்வேறுபாடுகள் இனங் காணப்பட்டுள்ளதுடன் 2019 திறைசேரி கணக்கு அறிக்கை சீராக்குவதற்கு காலம் போதியளவில் இல்லாமல் இருந்தமையால் இவ்வேறுபாடு இருப்பதால் இதுவரை அந்த வேறுபாடு சீராக்கம செய்யபபட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் (ACA-6) இன் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,392,122,276 தொகையான நிதியல்லாத சொத்துக்களின் கூட்டுப்பெறுமதி 2019 சனவரி 01 உள்ளவாறு ஆரம்ப மீதியாக முன்கொண்டு வருவதற்குப் பதிலாக அத்திகதியில் பதிவு செய்யப்பட்டிருந்த ஆரம்ப மீதி ரூபா 7,662,169,394 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீதியாக முன்கொண்டு வரப்பட்டவற்றை பதிவுசெய்யும் போது ரூபா 1,270,047,118 தொகை கூடுதலாக கணக்கீடு செயய்ப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆணடின் கணக்குகளில் விடுபட்டிருந்த நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி 2019 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதிக்கு சேர்த்து காண்பிக்கப்பட்டமை ஊடாக அம்மீதி அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. | பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்த நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி மீளாய்வாண்டின் போது மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். | ஆதனங்கள், பொறிகள்மற்றும் உபகரணங்கள் மீதிகளுக்குரிய நிதி நிலைக்கூற்றின் மீதி திறைசேரி கணக்கு அறிக்கைக்கு இடையே வேறுபாடுகாணப்பட்டமை அரசின் கணக்குகள் தயாரிக்கும் நிகழ்ச்சி ஆரம்ப மீதிகளை உள்ளடக்குவதற்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் இவ்வாறு இடம்பெற்றதாக சுடடிக் காண்பிக்கின்றேன். அதனை சீராக்குவதற்காக CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் நடப்பாண்டின் ஆரம்ப மீதிகளை பதிவு செய்வதற்காக வேறான நிரலொன்று உள்ளடக்குவதன் மூலம் மேற்கொள்ள வேண்டியதுடன் அது அரச கணக்குகள் திணைக்களத்தினால் CIGAS நிகழ்ச்சித்திட்டம் நாளதுவரை யாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |
| (இ) | 2102 மற்றும் 2103 ஆம் இலக்க மூலன செலவின விடயங்களின் செலவிடப்பட்டு 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் பொறிகள் நடைமுறையல்லாத சொத்துக்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 53,395,032 ஆக இருந்த போதும் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் (ACA-6) ரூபா 28,936,839 மாத்திரமே. இதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு பெறுமதி ரூபா 24,458,193 தொகையான நிதியல்லாத சொத்துக்கள் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கீடு செய்த மூலதன நிதி ஏற்பாடுகளிலிருந்து உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு கொள்வனவு செய்த தளபாடங்கள் முறையான அதிகாரமொன்று இல்லாமல் சட்டரீதியாக அமைச்சிற்கு கையளித்தல் பொருத்தமான நடவடிக்கை எடுத்து நிதியல்லாத சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் குறைத்து கணக்கீடு செய்தவற்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்குரியதாக 2102 ஆம் செலவின விடயத்திலிருந்து கொள்வனவு ரூபா 42,946,705 மற்றும் 2103 ஆம் செலவின விடயத்திலிருந்து கொள்வனவு ரூபா 10,448,327 ஆகும். அதன் பிரகாரம் குறித்த மொத்த பெறுமதி ரூபா 53,395,032 தொகை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்படும் ரூபா 200,000,000 ஆன நிதி ஏற்பாடுகளப் பயன்படுத்தி அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களின் பெறுமதியான ரூபா 24,258,193 ஆன வேறுபாடு என சுட்டிக் காட்டுகின்றேன். அச் சொத்துக்கள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அவர்களின் நிதிக்ற்றுக்களில் ஆரம்ப மீதியாக கணக்கீடு செய்யப்பட வேண்டுமென தயவுடன் அறிய தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | திறைசேரி பதிவேடு (SA 32) இன் பிரகாரம 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் பொறிகள் மற்றும் இயந்திராதிகள் என்பவற்றின் கூட்டுப்பெறுமதி ரூபா 18,745,033 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. நிதியல்லாத சொத்துக்களின் திணைக்கள கணக்கு மீதிகள் பெறுமதியான ரூபா 53,395,032 மற்றும் திறைசேரி கணக்கு மீதிகளுக்கு இடையே காணப்பட்ட ரூபா 34,649,999 ஆன வேறுபாடு ஒப்பிடப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி திணைக்கள கணக்கு மீதிகள் மற்றும் திறைசேரி கணக்கு மீதிகளுக்கு இடையே வேறுபாடு ஒப்பிடப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 திறைசேரி கணக்கு அறிக்கை (SA 82) இன் பிரகாரம் ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், பொறிகள் மற்றும் இயந்திராதிகள் என்பவற்றின் கூட்டுப்பெறுமதி ரூபா 18,745,033 என கணக்கீடு செய்யப்பட்டிருந்ததாக ஏற்றுக் கொள்கின்றேன். அவ்வேறுபாட்டிற்கான காரணங்களும் 2019 நிதிக் கூற்றுக்களில் 121 ஆம் பக்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதுடன் மேற்படி (அ) பந்தியின் கீழ் அவ்வேறுபாட்டிற்கு காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. |

**1.6.2. வைப்பு கணக்கு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வைப்புக்கள் தொடர்பான கூற்றில் (ACA-4) இன் 6003/0/0/001/0/000/0 ஆம் இலக்க பொது வைப்புக்கள் பழைய கணக்கின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,000,000 ஆன வரவு மீதிக்காக 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமொன்று கடந்தருந்த போதும் 269/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.7 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் தீர்வு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாற்றல் பத்திரத்தில் உள்ள தவறு தொடர்பாக கண்டுபிடிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் இம்மீதியை பதிவழிப்பதற்காக பரிந்துரைக்கப் பட்டுள்ளதாக வைப்புக் கணக்கு தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அம்மீதியை தீர்வு செய்வதற்காக போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 269/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.7 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் தீர்வு செய்ய வேண்டியதுடன் தீர்வுசெய்வதற்காக போதியளவு மற்றும் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரச கணக்குகள் குழுக் கூட்டத்தின் பரிந்துரையின் பிரகாரம் நியமிக்கப்பட்ட குழு அறிக்கையின் பரிந்துரை செயற்படுத்து வதற்காக செயலாளர், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சுக்கு DIST.CMB/ ACC/08/Deposit ஆம் இலக்க 2018 திசெம்பர் 31 மற்றும் 2019 மே 17 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் அறவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட செயலக மட்டத்தில் எடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளும் போதியளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. |

## 1.6.3 பதிவேடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் அன்றாடம் பரீட்சிக்கப்படக் கூடிய வகையில் பொறுப்புக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டு முறையாக பேணப்பட வேண்டும். | மாவட்ட செயலகம் மற்றும் 13 பிரதேச செயலகங்களில் பேணிச்செல்லப்படுவதுடன் நாளதுவரையாக்கப் படுவதில் குறைபாடு காணப்பட்டதால் அவற்றை சரி செய்வதற்கு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 420 இன் பிரகாரம் செயல்நிமித்த கட்டுநிதி முற்பண பதிவேடொன்று முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 420 இன் பிரகாரம் செயல்நிமித்த கட்டுநிதி முற்பண பதிவேடொன்று முறையாக பேணப்பட வேண்டும். | - மேற்படி - |
| (இ) | நிதிப்பிரமாணம் 451(1) இன் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாப் பதிவேடொன்று நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 451(1) இன் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாப் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட வேண்டும் | - மேற்படி - |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 452(2) இன் பிரகாரம் மின்சார உபகரணப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 452(2) இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மின்சார உப பாகங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பொருட் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - |
| (உ) | நிதிப்பிரமாணம் 453 இன் பிரகாரம் ஆளணி சம்பளப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 453 இன் 17 ஆம் இலக்க திறைசேரி மற்றும் கணக்காய்வு மாதிரியின் பிரகாரம் ஆளணி சம்பளப் பதிவேடொன்று நாளதுவரையாக பேணப்பட வேண்டும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை பதிவேடொன்று நாளது வரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தன் பிரகாரம் பிணை பதிவேடொன்று நாளது வரையாக பேணப்பட வேண்டும் | - மேற்படி - |
| (எ) | நிதிப்பிரமாணம் 1647(அ) இன் பிரகாரம் வாகன சம்பவப் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொது 267 மாதிரியின் பிரகாரம் வாகன சம்பவப் பதிவேடு ஒவ்வொரு வாகனத்திற்காகவும் பேணப்பட வேண்டும். | - மேற்படி - |
| (ஏ) | நிதிப்பிரமாணம் 1647(ஈ) இன் பிரகாரம் எரிபொருள் பதிவேடு ஒன்று நாளது வரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் எரிபொருள் பதிவேடு நாளது வரையாக பேணப்பட வேண்டும். | - மேற்படி - |
| (ஐ) | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகனங்கள் நிரட்படுத்தும் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வாகன நிரட்படுத்தும் பதிவேடு ஒன்று நாளது வரையாக பேணப்பட வேண்டும். | - மேற்படி - |

### 1.6.4 கணக்கீட்டு உத்தியோகத்தர் வழங்க வேண்டிய சான்றிதழ்

----------------------------------------------------------------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்துப் பேணப்படுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் ஆக்கபூர்வம் தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதனை ஆக்கபூர்வமாக வைத்திருப்பதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரிப்பதற்காக எடுக்கப்படும் |

| | | |
|---|---|---|
| வேண்டுமாயினும், அம்மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | நடைமுறைகள் தொடர்பாக பிரதேச செயலாளர் மாநாடு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் மற்றும் பதவிநிலைக் கூட்டங்களின் போது அடிக்கடி கலந்துரையாடலுக்கு உட்படுத்தி தேவைவயான நடவடிக்கைகளை எடுப்பதாக தயவுடன் குறிப்பிடுகின்றேன். இது தொடர்பாக மீளாய்வாண்டில் அறிக்கை தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச அனுப்புவதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரவிற்கு ஆலோசணை வழங்க நடவடிக்கை எடுப்பேன் |

## 2. நிதி மீளாய்வு

--------------------------

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தின் மாதாந்த கட்டுநிதி விண்ணப்பம் மற்றும் கிடைத்த கட்டுநிதி தொடர்பான பகுப்பாய்வின் போது ஆண்டில் கோரப்பட்ட மொத்த கட்டுநிதியை விட ரூபா 17,891,180,382 குறைவாக கிடைத்திருந்ததுடன் மாதாந்தம் திறைசேரி யிடமிருந்து கோரிய | கட்டுநிதி கோரும் போது முறையாக திட்டமிட்டு போதியளவு கட்டுநிதி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உங்களது அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுநிதிகளுக்கு ஒப்பாக கிடைக்காத கட்டுநித 31 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | | |
| (ஆ) | பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாடுகளை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | போதியளவு கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடுகளை உச்ச அளவில் பயன்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் அரசின் நிதிக் கொள்கை தொடர்பாக எடுக்கப்படும் மாற்றங்கள் காரணமாக இவ்வாறு பயன்பாட்டில் சிக்கல்கள் ஏற்பட்டதாக குறிப்பிடுகின்றேன். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003, 2102 மற்றும் 2104 ஆம் இலக்க 03 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தேறிய நிதி ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 1,460.70 மில்லியனாக இருந்ததுடன் தேறிய செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 693.89 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் நிதிஏற்பாடுகளின் சேமிப்புக்களின் மொத்தம் ரூபா 773.81 மில்லியனாக இருந்ததுடன் சேமிப்புக்களின் சதவீதம் செலவின விடயங்களின் பிரகாரம் முறையே 41, 81 மற்றும் 47 ஆக இருந்தது. அவ்வாறே 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்கம் மற்றும் 2019 செப்தம்பர் 24 ஆந் திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செலவின முகாமைத்து வத்தின் ஊடாக செலவின விடயங்களில் சேமிக்கப்பட்டதாக செலவினக் கூற்றில் (ACA.2(II) சேமிப்பிற்காக காரணங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. எனினும் மேற்படி சுற்றறிக்கை ஏற்பாடுகளின் மூலம் | நிதிப்பிரமாணம் 50 ஏற்பாடுகளின் பிரகாரம் நடைமுறை சாத்தியான மற்றும் சரியாக செலவின மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கும் ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாட்டை பயன்படுத்தி நிர்மாண செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாவட்ட செயலகத் தொகுதியை 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்வதற்கும் ஹோமாகம பிரதேச செயலகத்தின் நிர்மாணத்திற்கு மீண்டும் நிதி வழங்கி பூர்த்தி செய்வதற்கு மதியுரை நிறுவனங்களில் அறிவுறுத்தல்களை கருத்திற் கொண்டு 2019 ஆம் ஆண்டிற்கு நிதிஎற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதும் அந்நிர்மாணம் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் இடம்பெறாமையால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டதாக 2019 நிதிக்கூற்றுக்களில் ACA 02(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனச் செலவினத்திற்காக கட்டாய சேமிப்பு ஓதுக்கீடு செய் நிதிஏற்பாடுகளில் 25 சதவீதம் மாத்திரமாகும். | | |
| (ஆ) | மூலதனச் செலவினத்தின் கீழான கட்டிட நிர்மாணங்கள் (2001), இயந்திரங்கள் மற்றும் இயந்திராதிகள் (2002) மேம்படுத்துதல் மற்றும் இயந்திரங்கள் மற்றும் இயந்திராதிகள் (2103) கொள்வனவு செலவின விடயத்திற்காக மேற்கொள்ளப் பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடு முறையே ரூபா 6,000,000 தொகை ரூபா 3,500,000 மற்றும் ரூபா 12,000,000 ஆக இருந்ததுடன் தேறிய செலவினம் முறையே ரூபா 5,711,872 தொகை, 3,491,170 தொகை மற்று் ரூபா 10,448,327 ஆக இருந்தது. இதன் பிரகாரம் சேமிப்புக்கள் ரூபா 288,128 தொகை, ரூபா 8,830 தொகை மற்றும் ரூபா 1,551,673 ஆக அதாவது தேறிய நிதிஏற்பாட்டில் 4.8 சதவீதம், 0.25 சதவீதம் மற்றும் 12.93 சதவீதமாக இருந்தமையால் 04/2019 மற்றும் 05/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் மூலதனச் செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாடுகளில் 25 சதவீதம் சேமிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாடுகளில் சுற்றறிக்கை ஏற்பாடுகளன் பிரகாரம் கட்டாயம் சேமிப்பு மேற்கொள்ளப்பட்டு மூலதனச் செலவினம் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | குறித்த தேசிய பாதீட்டு சுற்றறிக்கைகள் 04/2019 மற்றும் 05/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைகளில் மீண்டெழும் செலவினத்தை முகாமை செய்து மொத்த மூலதனச் செலவினத்தில் 25% சேமிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தயவு செய்து குறிப்பிடுகிறேன். |
| (இ) | 18 செலவின விடயங்களுக்காக நிதிப்பிரமாணததின் பிரகாரம் மாற்றுவதன் மூலம் ரூபா 216,825,000 ஆன நிதிஏற்பாடு கூட்டுதல் மற்றும் குறைத்தல் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் 03 செலவின விடயங்களுக்காக ரூபா 25,375,000 ஆன குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் மேலதிக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு ஆரம்ப மதிப்பீட்டு நிதி ஏற்பாடு திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2019 ஆம் ஆண்டின் ஆரம்ப மதிப்பீட்டை தயாரிக்கும் போது திட்டமிட்டு சரியாகவும் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 ஏற்பாடுகளின் பிரகாரம் இயலுமான வரை சரியாகவும் திட்டமிட்டு செலவின மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது எமக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்காக வழங்கப்படும் சீலின் (Ceiling) உள் நடவடிக்கை எடுக்க நேர்வதால் கோரப்படுகின்ற செலவின விடயங்களின் பிரகாரம் நிதி ஏற்பாடு கிடைக்காமை காரணமாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நிதி ஏற்பாடுகளை மாற்றுவதற்கும் மேலதிக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதாகவும் தயவுடன் குறிப்பிடுகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | செலவின விடய இலக்கம் 2104 – கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கீழ் கொழும்பு மாவட்ட செயலகத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,250 மில்லியன் மற்றும் ஹோமாகம பிரதேச செயலகத்தின் நிர்மாணத்திற்காக ரூபா 188 மில்லியனும் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br>அந்நிதிஏற்பாட்டில் ரூபா 200 மில்லியன் நிதிப்பிரமாணம் 66 மாற்றல் மூலம் கழிக்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலக கட்டிடத் தொகுதியின் நிர்மாணங்களின் கொடுப்பனவுளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மொத்த பட்டியல்களின் பெறுமதி ரூபா 698.86 மில்லியன் (கொடுப்பனவு ரூபா 648.75 மற்றும் பொறுப்புக்கள் ரூபா 50.11 மில்லியன்) ஆக இருந்தது. ஹோமாகம பிரதேச செயலக கட்டிட நிர்மாணம் 2017 ஆம் ஆண்டின் போது இடைநடுவில் இடைநிறுத்தப்பட்டு இதுவரை ஆரம்பிப்பதற்கு எவ்வித தயார்படுத்தலொன்று இல்லாமை காரணமாக அதற்காக செலவினம் உருவாகியிருக்கவில்லை. இதன் பிரகாரம் ரூபா 739.14 ஆன மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | நிர்மாண ஒப்பந்தத்திற்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட வேண்டிய மூலதனச் செலவினங்களுக்கு போதியளவு நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல் நிதிப்பிரமாணம் 50 ஏற்பாடுகளின் பிரகாரம் நடைமுறைச் சாத்தியமான செலவின மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் ஒதுக்கீடு செய்த மூலதன நிதிஏற்பாடுகளை ஏனைய செலவினத் தலைப்பொன்றுக்கு முறையற்ற விதத்தில் நிதி ஏற்பாடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருக்க வேண்டும். | ஹோமாகம பிரதேச செயலகத்தின் நிர்மாணத்திற்காக அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மீண்டும் அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்ட போதும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்காமையால் அந்நிர்மாணம் ஆரம்பிக்காமை காரணமாக நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. மாவட்ட செயலகத்தின் இரண்டாம் கட்டத்தை பூர்த்தி செய்வதற்குரிய மதியுரை நிறுவனத்தின் பரிந்துரையின் பிரகாரம் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டதால் நிதிஏற்பாடு சேமிப்பொன்று இடம்பெற்றிருந்தது.<br>அவ்வாறே 2102 அலுவலக உபகரண செலவின விடயத்திற்காக பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் தெரியப்படுத்தலின் பிரகாரம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் நிதிஏற்பாடு மாற்றப்பட்டு வழங்கப்பட்டதுடன் அதில் வழங்கப்பட்ட ரூபா 200,000,000 ஆன நிதி ஏற்பாடுகளில் ரூபா 24,458,193 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தமையால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. |
| (உ) | மூலதனச் சொத்துக்களை கையேற்றலின் கீழ் தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் செலவின விடயம் (2102) இற்காக பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 26 மில்லியன் மற்றும் மேலதிகமாக நிதிப் பிரமாணம் 66 மாற்றல் பதிரங்கள் மூலம் ரூபா 200 மில்லியன் நிதிஏற்பாடும் மேற்கொள்ளப் பட்டிருந்தது. இம்மாற்றல்கள் 155 ஆம் இலக்க செலவின விடயத்திற்கு உள்நாட்டு | காணப்படும் சட்ட ஏற்பாடுகளை கருத்திற்கொண்டு நிதிஏற்பாடுகளை மேற்கொள்ளல் அவற்றை உயர் அளவில் பயன்படுத்துதுல் | கொழும்பு மாவட்ட செயலக தொகுதியில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சை தாபிக்கும் போது அமைச்சிற்கு தேவையான தளபாடங்கள் கொள்வனவு செய்யுமாறு வேண்டுகோளுக்கு இணங்க பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தினால் குறித்த செலவினத்தை மாவட்ட |

| | | |
|---|---|---|
| அலுவல்கள் அமைச்சிற்கு தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கென அவதானிக்கப்பட்டது. அவ்வாறு ஒரு தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாட்டை வேறு தலைப்பின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்காக சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதமை அவதானிக்கப்படவில்லை. அந்நிதி ஏற்பாடுகளின் கீழ் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் ரூபா 24.46 மில்லியனான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் 2019 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்ட செயலகத்தின் 255 ஆம் தலைப்பின் கீழ் ஏனைய அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் கொள்வனவிற்காக ஒதுக்கீடு செய்த ரூபா 200 மில்லியன் நிதிஏற்பாடடில் ரூபா 175.51 மில்லியன் அதாவது 87.78 சதவீதம் சேமிப்புகள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணங்கள் தெளிவு படுத்தப்பட்டிருக்கவில்லை. | | செயலகத்தை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்த பணத்திலிருந்து முகாமைத்துவம் செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரான உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட வகையில் நி.பி 66 மாற்றல்கள் மூலம் ரூபா 200,000,000 தொகை 225-1-1-0-2102 செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டு குறித்த தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதாக தயவுடன் அறிய தருகின்றேன். அச்சொத்துககள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சொத்துக்களாக கணக்குகளில் எடுக்கப்படுவதாக தயவுடன் சுட்டிக் காட்டுகின்றேன். இது தொடர்பான தகவல்களை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிடம் விசாரித்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) 1002, 1101 மற்றும் 1202 ஆம் இலக்க 03 செலவின விடயங்களுக்காக நிதி ஏற்பாட்டை மிகைத்து ரூபா 569,357 ஆன பொறுப்புக்களுக்கு உட்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 94 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் செலவின விடயங்களில் வருடாந்த நிதிஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக் களுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கமல் இருத்தல் வேண்டும். | மேலும் பரீட்சிக்கப்பட்டு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 23 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு (III) இல் குறிப்பிடப்படும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் மீதி திறைசேரியால் ஒவ்வொரு செலவின விடயத்திற்குரிய வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் (SA 92) பொறுப்பு மீதியுடன் ஒப்பிடப்பட வேண்டும். எனினும் 02 செலவின விடயங்களுக்குரிய ரூபா 217,908 தொகை கூடுதலாகவும் 04 செலவின விடயங்களுக்குரியதாக ரூபா 70,848,764 குறைவாகவும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். | மேலும் பரீட்சித்து அறிக்கையிடுவதாக தயவுடன் அறிய தருகின்றேன். |
| (இ) | 05 செலவின விடயங்களுக்குரிய 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 234,903 ஆக இருந்த பொறுப்புக்கள் 2019 ஆம் ஆண்டில் செலுத்தி விடுவிக்கப்படாதிருந்ததுடன் அப்பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு (III) இல் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பொறுப்புக்கள் செலுத்தி விடுவிக்கப்பட்டிருந்ததுடன் செலுத்தாவிட்டால் அப்பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். CIGAS நிகழ்ச்சியை செயற்படுத்தும் உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றதும் புதிய உத்தியோகத்தர் CIGAS நிகழ்ச்சியை செயற்படுத்துவதால் அது பொறுப்புக்களின் கீழ் செலுத்தாமல் புதிததாக பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் உள்ளடக்கப்பட்டு CIGAS நிகழ்ச்சி மூலம் கொடுப்பனவு செய்வதாகும். எனினும் தற்போது அப்பொறுப்புக்கள் இல்லாமையால் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு அப்பொறுப்புக்களை நீக்க நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

## 2.4 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்காக சனாதிபதி செயலகத்தினால் (செலவினத் தலைப்பு 001) மேற்கொள்ளப் பட்டிருந்த நிதிஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 11,083,858 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 2,061,683 அதாவது 18.6 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்திற்காக பயன்பாடு, மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளின் சதவீதமாக 35 சதவீதம், 5 சதவீதம் மற்றும் 00 சதவீதமாக இருந்தன. | உரிய காலத்தில் கட்டுநிதியைப் பெற்றுக்கொண்டு ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறித்த நிகழ்ச்சித் திட்டங்களுக்காக நிதிஏ்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதற்காக கட்டுநிதி கிடைக்காமையால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 26,160,000 மாத்திரம் கையிலுள்ள பட்டியல்களாக குறிப்பிடுகின்றேன். ஆதலால் நிதிஏற்பாடு குறைவாக பயன்படுத்தியுள்ளதாக சுட்டிக்காண்பிக்கின்றேன். |

## 2.5 முற்பணங்களை வழங்குதலும் தீர்வுசெய்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(5) ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த செயல்நிமித்த கட்டுநிதி செயற்பாடு முடிவடைந்ததன் உடனேயே தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 28 சந்தர்ப்பங்களில் 15 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தியிருந்த ரூபா 1,608,244 ஆன செயல்நிமித்த கட்டுநிதி முற்பணத் தீர்ப்பனவு 11 நாட்கள் முதல் 58 நாட்கள் வரையான காலவீச்சிலான தாமதமொன்று இடம்பெற்றிருந்தது. | பெற்றுக்கொண்ட செயல்நிமித்த கட்டுநிதி செயற்பாடு முடிவடைந்ததன் உடனேயே தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக சகல பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளதாக அறிய தருகின்றேன். |

## 2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சேவை இடமாற்றம், மரணித்தல், ஓய்வுபெறல், வேலை இடைநிறுத்தம் சேவை விட்டுச்சென்றவை காரணமாக தற்போது சேவையில் இல்லாத உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்கு நிலுவையாக உள்ள கடன் மதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,69,556 தொகை 2 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டன. | குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவைக் கடன்மீதிகளை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கில் நிலுவையாக உள்ள கடன் மீதி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,885,696.38 ஆக இருந்த போதும் 2020 யூன் 26 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 2,340,741.51 ஆக இருந்தது. அதற்காக மாவட்ட செயலக மட்டத்தில் எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளும் எடுத்துள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன். 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அரச ஊழியர்களுக்கு பிணையின்றி இடர் கடன் வழங்கல் வழங்கல் அரசின் கொள்கை ரீதியான தீர்மானமாக இருந்த போதும் கடன் பெற்றுக்கொண்ட அரசின் ஊழியர்கள் சேவை விட்டுச்செல்லல் வேலை இடைநிறுத்தம் செய்யப்படுதல், வேலையை விட்டுச்செல்லல் போன்ற விடயங்களின் பேரில் கடனை அறவிடுவதில் சிக்கல்கள், எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாட்பட்டு இடம்பெறும் செயற்பாடாகும் அதன் பிரகாரம் 2020 யூன் 26 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 544,954.87 அறவிடப்பட்டுள்ளதாகவும் சட்டிக்காண்பிப்பதுடன் அறவிட முடியாத கடன்மீதிகளை அறவிடுவதற்கு சட்டமா அதிபர் ஊடாகவும் நடவடிக்கை நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கு முயற்சி எடுப்பதாக அறிய தருகின்றேன். |

## 2.7 வைப்புக்கள் மற்றும் மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 பிரதேச செயலகங்களுக்குரிய 6000-0-0-18-0-26 ஆம் இலக்க பிடிகாசு மற்றும் 6000-0-0-13-0-46 ஆம் இலக்க மூன்றாம் தரப்பினருக்கு கொடுப்பனவு போன்ற 02 வைப்புக் கணக்குகளில் 02 ஆண்டுகள் முதல் 05 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த வைப்பு மீதியான ரூபா 3,149,835 ஆக இருந்ததுடன் அவ்வைப்புக் கணக்கு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 571 ஏற்பாடுகளின் பிரகாரம் வைப்புக் கணக்கிலான பிடிகாசு மற்றும் மூன்றாம் தரப்பினருக்கு கொடுப்பனவு செய்ய கொடுப்பனவுகளை விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 571 ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்வு செய்யுமாறு பிரதேச செயலாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 6000-0-0-17-0-6 ஆம் இலக்க இழப்பீட்டுக் கொடுப்பனவு வைப்புக் கணக்கில் 08 பிரதேச செயலகங் களுக்குரிய 05 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் கடந்த வைப்புக்களின் பெறுமதி ரூபா 97,212,669 ஆக இருந்ததுடன் காணி இழப்பீடு கொடுப்பனவு செய்யப்பட்டு அவ்வைப்பு மீதிகளை தீர்வு செய்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | காணி இழப்பீடுகளைக் கொடுப்பனவு செய்து அவ்வைப்பு மீதிகளை தீர்வு செய்வதற்கு போதிய மற்றும் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்து வைப்புக் கணக்கில் | கட்டுநிதி கிடைத்தவுடன் காலாவதியான வைப்புகளுக்காக கொடுப்பனவு செய்யுமாறு குறித்த பிரதேச செயலாளர்கள் தெரியப்படுத்தப்பட்டனர். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் காண்பிக்கப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் மாவட்ட செயலக பிரதானிகளால் தமது தாபனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டை செயற்படுத்து வதற்காக மூன்றாண்டு மத்திய கால பாதீட்டு காலச் சட்டகத்தில் நிதியாண்டிற்கு உரிய உள்ளடக்கப்பட வேண்டிய சகல விடயங்கள் மற்றும் தேவைப்பாடுகள் உள்ளடக்கப்பட்டு வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எனினும் மாவட்ட செயலகத்தினால் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர், வருடாந்த பெறுகைத் திட்டம் செயற்பாடுகள் திட்டத்தின் செயற்படு காலச்சட்டகம், எதிர்பார்த்த விளைவு மட்டம் மற்றுத் வருடாந்த கட்டுநிதி தேவைப்பாடு போன்ற விடயங்கள் உள்ளடக்கப் படும் வகையில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரி க்கப்பட்டு அதனை கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக ஈடுபடுத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. | எதிர்வரும் ஆண்டுகளில் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 3.2 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிர்மாண ரீதியான மற்றும் பெறுமதியான வளங்களை முகாமை செய்வதினூடாக மக்கள் வாழ்க்கையை பலப்படுத்தும் செயற்பணியை நோக்கி கொழும்பு மாவட்ட செயலகத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக செயலாற்றலை நிறைவேற்றும் போது போதியளவு மற்றும் செயற்திறனான முகாமைத்துவத்துடன் செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மாவட்ட செயலகத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றின் பிரகாரம் நிர்மாண ரீதியான மற்றும் பெறுமதியான வளங்களை முகாமை செய்வதினூடாக மக்கள் வாழ்க்கையை பலப்படுத்தும் திசைக்கு வழிகாட்டும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செயற்பாடுகளை நிறைவேற்றப்பட வேண்டும். | இது தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்ல |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 128 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 5/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு செயற்பாடுகள் சனவரி 15 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும் பொருள் மெய்மையாய்வு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை 2020 யூன் 20 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மெய்மையாய்வுக் குழு அறிக்கையில் பரிந்துரைத்திருந்த பற்றாக்குறை சொத்து உருப்படிகள் 59 உம் மிகை சொத்து உருப்படிகள் 50 மற்றும் கைதவிர்க்கப்பட வேண்டிய 54 சொத்து உருப்படிகள் தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிதிப் பிரமாணங்கள் நிதிச்சுற்றறிக்கைகள் ஏற்பாடுகளின் பிரகாரம் தாமதமின்றி உரிய காலத்தில் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளை பேணி பொருள் மெய்மையாய்வு சபை பரிந்துரைகளை செயற்படுத்தி கணக்கு களில் தேவையான சீராக்கங்களை மேற் கொள்ள துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் உரிய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 3.4 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 880 மற்றும் கொழும்பு மாவட்ட செயலாளரின் 2008 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய AE/K/பிணை/2008 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கெஸ்பவ, இரத்மலானமற்றும் பாதுக்க பிரதேச செயலகங்களில பிணை பெற்றுக் கொள்ளவேண்டிய 09 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 2008 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு குறித்துக்கொண்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | மஹரகம மற்றும் கடுவெல பிரதேச செயலகங்களில் தற்போது சேவையில் ஈடுபடாத உத்தியோகத்தர்கள் முறையே 08 பேர் மற்றும் 06 பேரின் வைப்பு பாஸ் புத்தகங்களை மீள கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேவையில் ஈடுபடாத உத்தியோகத்தர்களின் பாஸ் புத்தகங்களை மீள கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 892 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைப்பதற்கு தேவையான உத்தியோகத்தர்களின் திருத்த அறிக்கைகள் ஒவ்வொரு ஒவ்வொரு 03 வருட இறுதியிலும் அமைச்சின் செயலாளருக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பிரதேச செயலகம் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 892 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அறிக்கைகள் அமைச்சின் செயலாளருக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.5 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மஹரகம பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 2014 திசெம்பர் 14 ஆந் திகதி மரணித்த நலன்பெறுனரின் முதியோர் படி அட்டையை பயன்படுத்தி 2018 மே மாதம் வரை 42 மாதங்களில் ரூபா 84,000 ஆன முதியோர் வாழ்வாதார பணத்தை முறையற்ற வகையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இத்தொகையை மீள அறவிடுவதற்கும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி மோசடிக்குரிய தரப்பினரை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நிறுவகத்திற்கு ஏற்பட்ட நிதி நட்டத்தை இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 101 மற்றும் 156 பிரமாணங்களின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பின ரிடமிருந்து மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில குறித்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | மஹரகம பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 525 A உடஹமுல்ல கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் மரணித்த ஐந்து முதியோரின் ரூபா 392,000 ஆன முதியோர் வாழ்வாதார பணத்தை முறையற்ற வகையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை தொடர்பாக அதற்கு பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கும் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு தேவையான நடவடிக்கை களை எடுப்பதற்கும் நிறுவகத்திற்கு ஏற்பட்ட நிதி நட்டத்தை இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 101 மற்றும் 156 பிரமாணங்களின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரி டமிருந்து மீளப்பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (இ) | கணிப்பீட்டுப் பிழைகள் மற்றும் பரிமாற்றல் பிழைகள் ஓய்வூதியத்தை இரண்டு முறை கொடுப்பனவு செய்தல் ஓய்வூதியம் பெறுவோர் இறந்ததன் பின்னர் அது தொடர்பாக உறுதிப்படுத்தாமல் தொடர்ந்தும் ஓய்வூதியத்தை செலுத்துதல், இராணுவ ஓய்வூதியத்திற்காக இரண்டு முறை வாழ்க்கை செலவினப் படிகள் கொடுப்பனவு போன்ற | ஓய்வூதியத்தை சரியாகவும் முறையாகவும் தயாரித்து அவற்றை பரிசோதித்த பின்னர் ஓய்வூதியத்தை கொடுப்பனவு செய்வதற்கும் ஓய்வுபெறற தொடர்பாக உயிர் வாழ் சான்றிதழை எப்பொதும் பெற்றுக்கொண்டு உயிருடன் இருக்கும் | எதிர்வரும் காலங்களில் கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்களின் பிரகாரம் சரியாகவும் முறையாகவும் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| காரணங்களின் பேரில் கொழும்பு மாவட்டத்தின் 13 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் ஓய்வூதியம் பெறுவோருக்கு முறைகேடு மற்றும் முறையற்ற வகையில் ஓய்வூதியம் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. முன்னைய காலப்பகுதிகளில் 367 ஓய்வூதியம் பெறுவோருக்கு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ஓய்வூதிய தொகை ரூபா 68,308,347 ஆக இருநதது. அதில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 41,969,994 தொகை அறவிடப்பட்டிருந்த போதும் மேலும் அறவிடப்பட வேண்டிய நிலுவை தொகை ரூபா 26,338,380 ஆக இருந்தது, அவ்வாறு அறவிட வேண்டிய தொகைகளில் 5 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டு களுக்கும் இடைப்பட்ட மற்றும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளும் காணப்பட்டன. | ஓய்வூதியக்காரருக்க மாத்திரம் ஓய்வூதியத்தை கொடுப்பனவு செய்வதற்கும் நடவடிக்கைகளை துரிதமாக எடுத்தல் வேணடும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.6 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கொழும்பு மாவட்ட செயலக தீப்பிடித்தமையால் ஏற்பட்ட சேதங்களுக்கு 07 ஆண்டுகள் மற்றும் மஹரகம பிரதேச செயலகம் தீப்பிடித்ததால் ஏற்பட்ட சேதத்திற்கு 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அச்சேதங்களை அறவிடுவதற்கும் அல்லது பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நட்டங்கள் மற்றும் சேதங்களின் பெறுமதி முறையே ரூபா 92,606,688 மற்றும் ரூபா 624,491 என மொத்தம் ரூபா 93,231,179 ஆக இருந்தது.. அந்நட்டங்கள் மற்றும் சேதங்களை தீர்வு செய்வதற்காக 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக பரிசோதனையை துரிதமாக மேற்கொண்டு அதற்குப் பொறுப்பான தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் மற்றும் இடம்பெற்ற நட்டம் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 101 மற்றும் 156 பிரமாணங்களின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரி டமிருந்து மீளப்பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சேதத்தை பதிவழிப்பதற்காக கோரப்பட்டிருந்த போதும் அதனை பதிவழிப்பதற்கு முடியாதென அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

**3.7 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச செயலகமொன்றை ஆரம்பிப்பதற்கு முனனர் பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் இருக்கும் பிரிவுகள் மற்றும் எல்லைகள் தீர்மானிக்கப்பட்டு மும்மொழிகளிலும் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய போதும் 1999 மே 19 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட பாதுக்க பிரதேச செயலகம் மற்றும் 1999 மார்ச் 03 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்திற்காக உரிய எல்லைகள் தீர்மானிக்கப்பட்டு பிரிவினை ஸ்தாபிக்கும் வர்த்தமானி அறிவித்தல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வெளியிடப் பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலகமொன்றை ஆரம்பிப்பதற்கு முனனர் பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் இருக்கும் பிரிவுகள் மற்றும் எல்லைகள் தீர்மானிக்கப்பட்டு மும்மொழிகளிலும் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். | இது தொடர்பாக உரிய எதிர்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | மஹரகம நகர அபிவிருத்திக்காக காணியை கையேற்றலின் கீழ் போக்குவரத்து சபைக்குரிய காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2016 பெப்ரவரி 02 ஆந் திகதிய மதிப்பீட்டுத் திணைக்களத்தன் இழப்பீட்டுத் தொகையான ரூபா 112 மில்லியன் ஐ போக்குவரத்து சபைக்கு கொடுப்பனவு செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிதிஏற்பாடு பெற்றுக்கொர்ணடு இழப்பீட்டுத் தொகை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த காணி முறையாக கையேற்கப்பட்டுள்ள போதும் இழப்பீட்டுக் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மஹரகம பிரதேச செயலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 06 மாடிகளுடன் கூடிய புதிய கட்டிடத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட 04 மின் உயர்த்திகள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த மின் உயர்த்திகள் விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக உரிய எதிர்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | பாதுக்க பிரதேச செயலகத்தின அதிகார் பிரதேசத்தில் தெற்கு மற்றும் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுகளுக்குரிய ஒதுக்கப்பட்ட காணியொன்றில் அரசின் காணி நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்பட்டு உடமை கொள்ளப்பட்டும். ஒதுக்கின் விளைச்சல் குத்தகையாளர் உடமை கொண்டுள்ள காணிகளில் உரிமை தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்து வதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப் பட்டிக்கவில்லை. | விளைச்சல் வரி அறவீடு அடிப்படையில் ஒதுக்கின் காணிகளில் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டு வதிவிட ரீதியாக செயற்படும் தரப்பினர் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக உரிய எதிர்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | தெஹிவல கல்கிஸ்ஸ மாநகர சபை அதகாரப் பிரதேசத்தில் 175 ஆம் இலக்க வீதவரி காணியில் 26.5 சதுர பேர்ச் அளவான இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான காணி முயைாக சபைக்கு பொறுப்பேற்கப்படாமல் பொதுமக்களின் பணத்தைப் பயன்படுத்தி ரத்மலான பிரதேச செயலக அலுவலக கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இக்கட்டிடத்தின் இடவசதிகள் போதியளவில் இல்லாமையால் புதிய கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக தற்போது மக்கள் சேவைகள் கிரிக்கட் சங்கத்திற்கு நீண்டகாலமாக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த இரத்மலான இலக்கம் 511 காலி வீதியில் அமைந்துள்ள காணியில் (50 பேர்ச்) அளவொன்று பெற்றுக் | குறித்த காணியை கையேற்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக உரிய எதிர்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக ரத்மலான பிரதேச செயலகத்திற்கு 2017 நவம்பர் 17 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதும் இக்காணியை கையேற்பது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | கொழும்பு, தெஹிவள, கொலன்னாவ, கெஸ்பவ மற்றும் ஹோமாகம ஆகிய பிரதேச செயலகங்கள் நடாத்திச் செல்லப்படும் காணிகளின் உரித்து அப்பிரதேச செயலகங்களுக்கு உரித்தில்லாமல் இருப்பதுடன் அவற்றின் உரித்தை கையேற்பதற்காக இதுவரை முறையான நடவடிக்கை யொன்று எடுக்கப்பட்டிருக்க வில்லை. உரித்து பிரதேச செயலகத்திடம் இல்லாத இக்காணிகளின் நிர்மாண வேலைகளுக்காக அந்த அலுவலகங்களினால் அரசின் பணம் அதிகளவில் செலவிடப்பட்டிருந்தது. | பிரதேச செயலகங்கள் அமைந்துள்ள காணிகளின் உரித்தினை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தெரிவு செய்யப்பட்ட எதிர்காலத்தில் காணிகளின் உரித்தை கையேற்க கையேற்கும் நடவடிக்கைகளை துரிதமாக எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல்

| கணக்கீட்டு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 யூலை 17 ஆந் திகதிய 4/2018 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றிக்கையின் 8 ஆம் பந்தியின் அறிவுறுத்தலின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது தற்போதய மற்றும் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகளில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்குரிய 22 விடயத்துறைகளின் கீழ் 53 நிலைபேறான இலக்குகள் இனங்காணப்பட்டு திட்டம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தியை நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்டங்களையும் | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் இனங்காணப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்காக செயற்படுத்தப்பட்டோ அல்லது செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்திட்டங்கள் மற்றும் கடமைகள் தீர்மானித்தல் மற்றும் அவற்ற செயற்படுத்துவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனினும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றியிருந்ததாக 2019 ஆம் ஆண்டின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் நிறைவேற்றல் செயலாற்றலிக் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.. | நிகழச்சித்திட்டங்களையும் திட்டவட்டமாக அதற்காக நிதிஏற்பாடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் | |

## 5. நல்லாளுகை

### 5.1 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரச நிறுவனமொன்றிடமிருந்து சேவைகள் பெற்றுக்கொள்ளும் பொது மக்களின தேவைகளை விரைவாகவும், செயற்திறனாகவும் தரமாகவும் தொடர்ந்தும் நிறைவேற்றுவதாக எழுத்துமூல கடப்பாட்டுடனும் பொதுவாக எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தரமான மற்றும் நியமங்களின் கீழ் உயர்ந்த வகையில் நிறைவேற்றி பொது மக்களுக்கு சேவைகளை வழங்கக்கூடிய வகையில் பிரஜைகள் சாசனத்தை ஸ்தாபிக்கும் தேவைப்பாடு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அத்தேவைப்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை. | பொது மக்களின் தேவைகளை விரைவாகவும் செயற் திறனாகவும் தரமாகவும் தொடர்ந்தும் சேவைகளை வழங்குவதன் மூலம் பொது மக்களின் வாழ்க்கை தரத்தை செயற்திறனாக அதிகரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக பிரஜைகள் சாசனத்தை ஸ்தாபிக்கும் தேவைப்பாடு விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும். | பொது மக்களுக்கு வழங்கும் சேவைகளை மிகவும் செயற்திறனாக வழங்குவதற்கும் பிரஜைகள் சேவை நாடுனர் சாசனத்தை மிகவும் அர்த்தமுள்ள வகையில் செயற்படுத்துமாறு பிரதேச செயலாளர்களுக்கு தெரியப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

6. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையான 2101 இல் 13 13 சதவீதம் 272 வெற்றிடங்கள் காணப்பட்டதால் பொதுமக்களுக்கு வழங்கும் சேவைகளின் செயற்திறன் மற்றும் ஆக்கபூர்வமான தன்மைக்கு அது பாதகமான வகையில் தாக்கமளித்திருந்ததாக அவதானிக்கப்பட்டது. | குறித்த அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அலுவலக வெற்றிடங்களை பூர்த்தி செய்யுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதும் உத்தியோகத்தர்கள் வழங்கப்படாமை காரணமாக வெற்றிடங்கள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |